Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**STC.No. 32/2024**

**Deposition of PW.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சௌந்தரராஜன் | ஜாதி | : | |
| த/பெ | : | கனகராஜ் | தொழில் | : | இன்சூரன்ஸ் ஏஜென்ட் |
| கிராமம் | : | அம்பாத்துரை | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 52/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.03.2026.

(எதிரி ஆஜர்)

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் அம்பாத்துரையில் குடியிருந்துகொண்டு இன்சூரன்ஸ் ஏஜென்ட்டாக பணிபுரிந்து வருகிறேன். இன்சூரன்ஸ் ஏஜென்ட் தொழிலை தவிர நீங்கள் ரியல் எஸ்டேட் மற்றும் வட்டி தொழில் செய்து வருகிறீர்கள் என்றால் சரியல்ல, ரியல் எஸ்டேட் தொழிலை சேர்த்து செய்து வருகிறேன். இவ்வழக்கில் சாட்சியம் அளித்துள்ள சாட்சி மோகனும், நீங்களும் ரியல் எஸ்டேட் தொழிலில் பங்குதாரர்கள் (Partners) என்றால் சரியல்ல. எதிரி உங்களிடம் எந்த தேதியில் ரூ.2,00,000/- கடன் கேட்டார் என்று உங்களுடைய அறிவிப்பு, வழக்கு , நிரூபண வாக்குமூலம் ஆகியவற்றில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். எதிரி உங்களிடம் எந்த தேதியில் ரூ.2,00,000/- கடன் கேட்டார் என்று உங்களுடைய அறிவிப்பு, வழக்கு , நிரூபண வாக்குமூலம் ஆகியவற்றில் குறிப்பிட்டு சொல்லாமல் வழக்கிற்காக சொல்லியுள்ளதாக பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

ரூ.2,00,000/- த்தை எந்த விதமாக எதிரிக்கு கொடுத்தீர்கள் என்று குறிப்பிட்டு உங்களுடைய வழக்கு, நிரூபண வாக்குமூலம் ஆகியவற்றில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல, ரொக்கமாக கொடுத்துள்ளதாக சொல்லியுள்ளேன். எதிரியும், எதிரியின் மனைவி கவிதா இரண்டு பேரும் உங்களிடம் கடன் வாங்கியதாக சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். இவ்வழக்கில் எதிரி எந்த தேதியில் உங்களிடம் காசோலையை கொடுத்தார் என்று நீங்கள் வழக்கில் குறிப்பிட்டு சொல்லவில்லை

என்றால் சரியல்ல, பணத்தை கொடுக்கும் போது காசோலை கொடுத்துள்ளதாக சொல்லியுள்ளேன்.

நீங்கள் சொல்வது போல் எதிரி இந்த வழக்கு காசோலையை உங்களிடம் 10.05.2023 அன்று கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் எதிரியிடம் 27.06.2022 அன்று வங்கி பரிவர்த்தனை மூலம் ரூ.2,00,000/- கொடுத்துள்ளீரகளா என்றால் கொடுத்துள்ளேன். ஆனால் இந்த வழக்கிற்கும் அந்த பரிவர்த்தனைக்கும் சம்மந்தம் இல்லை. 2023 ஆம் வருடத்தில் அவர் என்னிடம் வாங்கிய பணத்தை திருப்பி கொடுத்ததற்கான ஆவணம் ஆகும். 27.06.2022 அன்று நீங்கள் எதிரிக்கு கொடுத்த ரூ.2,00,000/- க்கு ஆதரவாக இவ்வழக்கு காசோலையுடன் சேர்த்து இன்னும் 2 எதிரியின் காசோலைகளும், ரூ.100/- க்கான வெற்றுப் பத்திரம் இரண்டையும், இரண்டு கடனுறுதி சீட்டையும் நீங்கள் பெற்றுக்கொண்டீர்கள் என்றும், இந்த வழக்கு காசோலைக்கு பிணையமாக எதிரி மனைவியிடம் இருந்து STC No.31/2024 ல் நீங்கள் சொல்லியுள்ள எதிரி மனைவியின் காசோலையுடன் சேர்த்து இன்னும் இரண்டு காசோலைகளையும், ரூ.100/- க்கான வெற்றுப் பத்திரம் இரண்டையும், இரண்டு கடனுறுதி சீட்டையும் நீங்கள் பெற்றுக்கொண்டீர்கள் என்றால் சரியல்ல.

நீங்கள் கொடுத்த தொகைக்கு ஒவ்வொரு மாதமும் வங்கி பரிவர்த்தனை மூலமாகவும், நேரடியாகவும் மாதம் ரூ.10,000/- த்தை வட்டியாக பெற்றுக்கொண்டுள்ளீரகள் என்றால் சரியல்ல. அது முதலில் கொடுத்த பணத்திற்கான ஆவணம் ஆகும். 27.06.2022 முதல் 27.07.2023 வரை அவர் பெற்ற ரூ.2,00,000/- க்குரிய வட்டியையும், அசல் ரூ.2,00,000/- யையும் மொத்தமாக உங்கள் வங்கி கணக்கின் மூலமாகவும், நேரடியாகவும் எதிரி உங்களுக்கு செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல. தவணை தவறிய மாத வட்டி தொகையை எதிரி செலுத்த தவறியதால் கூடுதலாக வட்டி கேட்டு எதிரியின் காசோலைகளை பயன்டுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீரகள் என்றால் சரியல்ல.

எதிரி எந்த தேதியில் காசோலையை வசூலுக்கு செலுத்த சொன்னார் என்று உங்களுடைய வழக்கில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். இந்த காசோலை வழக்கில் எதிரியின் மனைவிக்கு கொடுத்த STC No.31/2024 ல் உள்ள காசோலையை பற்றி குறிப்பிட்டு சொல்லியுள்ளீரகள் என்றால் சரிதான். 2022 ல் எதிரி உங்களிடமிருந்து ரூ.2,00,000/- பெற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக கொடுத்த காசோலை தான் இவ்வழக்கின் காசோலையும், எதிரி மனைவி கொடுத்த காசோலையான STC No.31/2024 ல் உள்ள காசோலையும் என்றும்,

எதிரி உங்களிடமிருந்து பெற்ற ரூ.2,00,000/- த்தையும் உங்களுக்கு செலுத்திவிட்ட பிறகும் அந்த வழக்கு காசோலையை பயன்டுத்தி இந்த வழக்கையும் STC No.31/2024 வழக்கையும் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

எதிரியின் மனைவி உங்களிடம் ரூ.1,00,000/- வாங்கவில்லை என்றும், எதிரி மனைவி உங்களிடம் எந்த பணமும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. காசோலையில் உள்ள கையெழுத்து தவறாக உள்ளது என்பதற்காக சட்ட நடவடிக்கை எதுவும் மேற்கொண்டீர்களா என்றால் அதற்காக தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். கையெழுத்து மாறுபட்டுள்ளதால் வேறு காசோலையை எதுவும் எதிரியின் மனைவியிடம் நீங்கள் கேட்கவில்லை என்றால் சரிதான். நீங்கள் இந்த வழக்கில் பணம் வாங்கியதாக சொல்லிய தேதியான 10.05.2023 அன்று எதிரி தருமபுரியில் உள்ள அரூரில் தன்னுடைய வியாபரம் நிமத்தமாக 08.05.2023 முதல் 11.05.2023 வரை Hotel ATMV boarding and lodging அறை எண். 116 ல் தங்கியிருந்தார் என்றால் சரியல்ல. 10.05.2023 அன்று எதிரியிடம் ரூ.2,00,000/- த்தை நீங்கள் கொடுக்கவில்லை என்றும், ரூ.1,00,000/- த்தை எதிரி மனைவியிடம் நீங்கள் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, எதிரி எங்கு தங்கியிருந்தாலும் சின்னாளபட்டிக்கு வந்து வாங்கியிருக்க வாய்ப்புள்ளது.

நீங்கள் சொல்லியுள்ள தேதியில் எதிரி உங்களிடம் பணம் வாங்கியிருக்க வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல, வாய்ப்புள்ளது. எதிரி மீது நீங்கள் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கானது எதிரியிடம் இருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. எதிரி தான் என்னை திட்டமிட்டு ஏமாற்றியுள்ளார். எனவே இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor